# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

## DEPOSITION OF WITNESS

OS.NO. - 68/2013

D.W.1 - சகுந்தலா க/பெ.பெருமை

DATE - 12.10.2023.

பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

நான் எத்தனையாவது பிரதிவாதியின் வாரிசு என்றால் 10வது பிரதிவாதியின் வாரிசு கேள்வியை மீண்டும் கேட்ட போது சாட்சி தான் பெருமை என்பவரின் வாரிசு என்றும், எத்தனையாவது பிரதிவாதியின் வாரிசு என்று கவனம் இல்லை என்று கூறுகிறார். நான் எத்தனையாவது பிரதிவாதி என்றால் 2வது பிரதிவாதி. முதலாவது பிரதிவாதி யார் என்றால் புதுமை. அசல் வழக்கு எந்த வருடம் எந்த மாதம் தாக்கல் செய்யப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா தாக்கல் செய்த போது என்னுடைய கணவர் பெருமை உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார். அவர் இந்த வழக்கில் ஆஜர் ஆகி பதிலுரை தாக்கல் செய்தாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்துக்களை விற்பனை செய்தது குறித்து குறிப்பீட்டு சொல்லவில்லை என்றால் சரி தான். தாவா சொத்தை வழக்கு நிலுவையில் இருந்த போது தான் விற்பனை செய்துள்ளோம் என்றாலும் அதனை மறைக்க வேண்டும் என்பதற்காகவே அந்த விற்பனை குறித்து என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் உயிருடன் இருந்த போதே விற்று விட்டார். தாவா 2வது அட்டவணை சொத்து என்னவென்றால் எனக்கு கவனம் இல்லை. தாவா 3வது அட்டவணை சொத்து விவரம் என்னவென்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவாவில் குறிப்பிட்டுள்ள முதல் சொத்து என்னவென்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்களுக்கான அசல் கிரைய பத்திரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்துக்களுக்கான உரிமை ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

எனக்கு கவனம் இல்லை. தாவா சொத்துக்களுக்கான அசல் ஆவணங்கள் என் கையில் உள்ளதா என்றால் இல்லை. அசல் ஆவணங்கள் எங்கு உள்ளது என்றால் என் கணவர் தொலைத்து விட்டார். எப்போது தொலைத்தார் என்றால் சரியாக கவனம் இல்லை. என் கணவர் உடல்நலம் சரியில்லாமல் இருந்த போது தொலைத்து விட்டார். தாவா சொத்துக்களுகாகான அசல் ஆவணங்களை என் கணவர் பாதுகாப்பாக வைத்திருந்தார் என்றும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என் கணவர் இறப்பதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்னர் உடல்நலமட் சரியில்லாமல் இருந்தார் என்றால் 5 வருட காலமாக உடல்நலம் சரியில்லாமல் இருந்தார். என்ன உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் மஞ்சள்காமாலை, லிவர் தொந்தரவு இருந்தது. என் கணவருக்கு மது அருந்தும் பழக்கம் இருந்ததா என்றால் இருந்தது. எத்தனை வருட காலமாக அவர் மது அருந்தி வந்தார் என்றால் எனக்கு தெரியாது. இறக்கும் தருவாயில் மது பழக்கத்தை விடாமல் தொடர்ந்து குடித்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவர் இறக்கும் போது நான் உடன் இருந்தேனா என்றால் ஆமாம். என் கணவர் என்ன பணி செய்து வந்தார் என்ற விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு குறிப்பிடாததற்கு என்ன காரணம் என்றால் எனக்கு ஞாபகம் இல்லாததால் சொல்லவில்லை. நான் தற்போது எங்கு வசித்து வருகிறேன் என்றால் சித்தூர்கேட் பலமனேரி ரோடில் வசிக்கிறேன். அந்த வீடு யாருடையது என்றால் என்னுடைய கணவருடையது. அந்த வீட்டிற்கு பக்கத்தில் உள்ள வீடு யாருடையது என்றால் யாருடையது என்று எனக்கு கவனம் இல்லை. மற்றொரு பக்கம் உள்ள வீடு யாருடையது என்றால் புதுமை என்பவருடையது. அதற்கு பக்கத்து வீடு யாருடையது என்றால் எனக்கு தெரியாது. அந்த பக்கத்து வீட்டை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் புதுமை வீட்டிற்கு பக்கத்தில் என்னுடைய கடை ஒன்று உள்ளது. அதற்கு பக்கத்தில் உள்ளது யாருடையது என்றால் கடை உள்ளது. அந்த கடை ஜெயக்கொடி என்பவருக்கு சொந்தமானது. நான் வசித்து வரும் இடத்தில் என்ன கடை வைத்து நடத்தி வருகிறேன் என்றால் என் கணவர் இருந்த போது ஹோட்டல் கடை வைத்து நடத்தி வந்தோம். என் கணவர் இறந்த பிறகு அரிசி கடை வைத்துள்ளேன். ஒரு நகை அடகு கடை வாடகைக்கு விட்டுள்ளேனா என்றால் இல்லை. என் கணவர் சமார் 30-40

வருடங்களாக அந்த இடத்தில் ஹோட்டல் நடத்தி வந்திருப்பாரா என்றால் இல்லை. அந்த ஹோட்டலின் பெயர் என்னவென்றால் சகுந்தலா ஹோட்டல். எப்போத இருந்து அந்த பெயர் இருந்தது என்றால் சுமார் 25 வருடங்களாக இருந்தது. எனக்கும் பெருமை என்பவருக்கும் எப்போது திருமணம் ஆனது என்றால் சரியாக கவனம் இல்லை. எங்கு திருமணம் நடந்தது என்றால் எங்கள் ஊரிலேயே நடந்தது. என்னுடைய ஊர் என்னவென்றால் கல்லூர் கிராமம் ஆகும்.என்னுடைய சொந்த ஊர் கல்லூர் இல்லை என்றாலும் சயனகுண்டா அருகில் உள்ள ஒரு கிராமம் என்றாலும் சரியல்ல. எனக்கு திருமணம ஆகி 10-15 ஆண்டுகள் இருக்குமா என்றால் இல்லை. சுமார் 28 வருடங்கள் ஆகிறது. எனக்கு திருமணம் ஆவதற்கு முன்னரே என் கணவரும் அவரின் குடும்பத்தாரும் சோந்து தான் ஹோட்டல் தொழில் செய்து வந்தார்கள் என்றும் அதனை மறைக்க வேண்டும் என்பதற்காகவே தற்போது நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கு திருமணம் ஆன வருடம் ஞாபகம் இலலை என்று சொல்வது ஹோட்டல் தொழில் என் பெயரில் நடந்து வந்தது என்பதற்காக தான் என்றால் சரியல்ல. என் குடுமட்பத்தில் உள்ள லாவண்யா என்பவர் யார் என்றால் யார் என்று எனக்கு தெரியாது. புதுமை என்பவருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் எனக்கு தெரியாது. இந்த ததாவாவில் உள்ள 3வது பிரதிவாதியின பெயர் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எல்லா உண்மையும் தெரியும ஏ்னறாலும் அந்த உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. புதுமை என்பவருக்கு எத்தனை குழந்தைகள் என்றும் அவர்களின் பெயர் எனக்கு தெரியும் என்றாலும் சரியல்ல. 3வது வாதி லாவண்யா என்பவர் பெயரில் தான் ஹோட்டல் நடந்து வந்தது என்றும் அதனை மறைக்க வேண்டி தான் நான் பொய் சொல்கிறேன் எனறாலும் சரியல்ல. என் கணவர் எந்த பணியும் செய்யவில்லை என்றாலும் செய்திருந்தால் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் கவணம் இல்லை. தாவா சொத்துக்களை என் கணவர் விற்கவில்லை என்றாலும் நான் தான் சூழ்ச்சி செய்து என் பெயரில் ஆவணங்களை மாற்றி கொண்டேன் என்றாலும் சரியல்ல. என் கணவருக்கு ஏற்பட்ட பாதிப்பு குடும்பத்தில் தொடர்ச்சியாக வரும் பாதிப்பு என்றால் சரியல்ல. என் கணவருக்கு உடல்நலம் சரியில்லாமல் இருந்த போது திட்டம் தீட்டி சொத்துக்களை அபகரிக்க வேண்டி 3ம் நபர்கள் மீது

ஆவணங்களை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. என் கணவருக்கு அவரின் உடன்பிறந்தவர் மீதும் அவரின் தாய் மீதும் அதிக அன்பும் என்றாலும் அதனை தடை செய்ய வேண்டும் என்பதற்காகவே ஆவணங்களை நான் ஏற்படுத்தி கொண்டேன் என்றாலும் சரியல்ல. வாதி என் கணவர் மீது அவர் குடும்பத்தார் மீதும் வழக்கு தொடர்ந்த பிறகு தான் வழக்கு விபரம் தெரிந்து கொண்டு என் கணவரின் விருப்பத்திற்கு மாறாக இந்த ஆவணங்கள் அனைத்தையும் மாற்றம் செய்தேன் என்றாலும் சரியல்ல. என் கணவர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி உண்மையை சொல்ல முற்பட்ட போது அவரை வெளியில் செல்லவிடாமல் நான் தடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. என் கணவரின் அடிப்படை பணி மற்றும் அவரின் வருமானம் அனைத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு கவனம் இல்லை. வாதியும 1 முதல் 5 வரையான பிரதிவாதிகளும் சோந்து தான் தாவா சொத்துக்களை கிரையம வாங்கினார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் இறந்து போன பெருமை என்பவரின் பங்களிப்பு சொத்து வாங்கியதில் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. இறந்து போன பெருமை என்பவரின் பெயரில் அவருடைய அப்பா தான் தாவா சொத்துக்கள் வாங்கி வைத்திருந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே தாவா சொத்துக்களை விற்று பணம் பெற்று கொண்டேன் என்றால் சரி தான். அதற்கு காரணம் சொத்தில் இருந்து எந்த பணமும் எனக்கு கிடைக்காது என்பதால் தான் என்றால் சரியல்ல. யார்யாருக்கு சொத்தை விற்றேன் என்றால் என் கணவருக்கு தான் தெரியும். எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரி தான். என்னுடைய முந்தைய குறுக்கு விசரணையின் போது நான் அனைத்து விவரங்களையும் ஒப்புக் கொண்டேன் என்றாலும் தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தற்போது நான் வசித்து வரும் வீடு மற்றும் கடை இரண்டையும் நான் விற்று விட்டேன் என்றால் எனக்கு கவனம் இல்லை. நான் நீதிமன்றத்ததை ஏமாற்ற வேண்டும் என்பதற்காகவே கவனம் இல்லை என்று சொல்கிறேன் எனறால் சரியல்ல. தாவா சொத்துக்கள் குறித்து முழு விவரம் எனக்கு தெரியாது என்றாலும் எனக்கு கவனம் இல்லை. இந்த நீதிமன்றம் என்னுடைய சாட்சியை ஏற்றுக் கொள்ள கூடாது என்றாலும் என்னுடைய சாட்சி பொய் சாட்சி என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்களை நான்

தாவா தாக்கல் செய்த பிறகு விற்பனை செய்தது செல்லாது என்றாலும் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல. எனவே தாவாப்படி வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு வழங்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

P REVATHY Digitally signed by P REVATHY

ADJ(FTC), VELLORE